**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.173/2024**

**நாள் : 27.04.2026**

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருதாச்சலம் | மாவட்டம் | : | சேலம் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | வயது | : | 32 |
| ஊர் | : | மேட்டுர் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | மேட்டுர் | தேசியம் | : | இந்தியன் |

1) நான் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று 22.04.2026 தேதியிட்ட அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். அதிகாரமளிப்பு கடிதம் **எ.ம.சா.ஆ.1.**, மேற்படி அழைப்பாணையில் பணிக்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.
மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட TN 23 BX 8955 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன **ஆய்வறிக்கை உண்மை நகல் எ.ம.சா.ஆ.2.** மேற்படி அழைப்பாணையில் TN 23 BX 8955 வாகனத்தை ஓட்டிச் சென்ற செல்வக்குமார் என்பவரது ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. இதுசம்பந்தமாக ஆவணங்களை தேடிப்பார்த்ததில் மோட்டார் சைக்கிள் மற்றும் கீர் வாகனத்தை ஓட்டுவதற்கு 11.03.2011ஆம் தேதியிலேயே ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஓட்டுநர் உரிமம் நாளது தேதிவரை

செயல்பாட்டில்தான் இருந்து வருகிறது. செல்வக்குமார் என்பவரின் ஓட்டுநர் உரிமம் உண்மை நகல் **எ.ம.சா.ஆ.3**. மேற்படி இருசக்கர வாகனத்தை எங்களது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் காப்பீட்டு சான்று சமர்ப்பிக்கப்படவில்லை. அதனைத்தான் எ.ம.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

எ.ம.சா.ஆ.2ல் காப்பீட்டு சான்றானது not produced என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர காப்பீடே இல்லை என்று சொல்லப்படவில்லை. அவ்வாறு காப்பீடு இல்லாத வாகனங்களுக்கு அபராதம் வசூலிக்கப்படும் என்றால் சரிதான். TN 23 BX 8955 வாகனத்தை பொருத்து இதுநாள் வரை அபராதம் வசூலிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.